# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

**අංක 14,930/7—1970 නොවැම්බර් 2 වැනි සඳුදා—1970.11.2**

14,930/7 ம் இலக்கம்—1970 ம் ஆண்டு நவெம்பர் மாதம் 2 ந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV—உள்ளூராட்சி

## உள்ளூராட்சி அறிவித்தல்கள்

### கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

**54 ஆம் பிரிவின் கீழான கட்டளை**

(257 ஆம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 54 ம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி உள்நாட்டலுவல்கள் அமைச்சர் பீலிக்ஸ் றெஜினோல்ட் டயஸ் பண்டாரநாயக்க ஆகிய நான் குருநாகல் மாவட்டத்திலுள்ள மஹாவ கிராமப் பிரதேசத்தின் கிராமச் சபையின் தலைவரான திரு. வாசல முதியான்சேலாகே புஞ்சிபண்டாகே புஞ்சிறால என்பவர்பால்—

(அ) திறமையின்மையும் தவறான முகாமையும்,

(ஆ) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தினால் சுமத்தப்பட்ட கடமைகளை வேண்டுமென்றே நிறைவேற்றுதலில் அசிரத்தை காட்டுதல், அத்துடன்

(இ) மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தினால் சுமத்தப்பட்ட கடமைகளை நிறைவேற்றுவதில் தகாத நடத்தையும், உள்ளன என்பதற்குப் போதிய சான்று உண்டு

என்று திருத்திப்பட்டுள்ளேனாதலால் சொல்லப்பட்ட திரு. வாசல முதியான்சேலாகே புஞ்சிபண்டாகே புஞ்சிறால என்பவரை மேற்சொல்லப்பட்ட கிராமச் சபையின் தலைவர் பதவியில் இருந்து இக்கட்டளை மூலம் நீக்குகிறேன்.

ෆී. ආර්. ඩී. බණ්ඩාරනායක,
அரசாங்க நிர்வாக,
உள்ளூராட்சி உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு,
1970 ம் ௵ நவெம்பர் ௴ 2 ந் ௳.
11-261/1

---

### கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

(257 ஆம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி உள்நாட்டலுவல்கள் அமைச்சர் பீலிக்ஸ் றெஜினோல்ட் டயஸ் பண்டாரநாயக்க ஆகிய நான் கொழும்பு மாவட்டத்திலுள்ள ஒயபொட பேருவக் கிராமப் பிரதேசத்தின் தற்போதுள்ள வட்டாரங்களை உட்பிரிவினை செய்வது சம்பந்தமாக 1970 யூலை 2 ன் 14,912/8 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலை அதனோடுள்ள அட்டவணைக்குப் பதிலாக இதனோடுள்ள அட்டவணையை இடுவதன் மூலம் இவ்வறிவித்தல் வாயிலாகத் திருத்துகிறேன்.

ෆී. ආර්. ඩී. බණ්ඩාරනායක,
அரசாங்க நிர்வாக,
உள்ளூராட்சி உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு,
1970 ம் ௵ நவெம்பர் ௴ 2 ந் ௳.

**அட்டவணை**

| நிரை 1<br>தற்போதுள்ள வட்டாரங்கள் | நிரை 2<br>புதிய வட்டாரங்கள் |
|---|---|
| கொஸ்கந்தவலே (308/309) .. | 1 ம் வட்டாரம்—கொஸ்கந்தவலே—கொஸ்கந்தவலேக் கிராமத்தைக் கொண்டது. |
| | 2 ம் வட்டாரம்—கிரிகித்தமுல்லே—கிரிகித்தமுல்லேக் கிராமத்தைக் கொண்டது. |
| இல. 310/311, 312 .. .. | 3 ம் வட்டாரம்—வீரகுல—வீரகுலக் கிராமத்தைக் கொண்டது. |
| இல. 312 .. .. | 4 ம் வட்டாரம்—உடதுத்திரிபிட்டிய—உடதுத்திரிபிடிய, பள்ளேதுத்திரிபிட்டிய கொரசாகொடை, மெத்தகொடை ஆகிய கிராமங்களைக் உள்ளடக்கியது. |
| | 5 ம் வட்டாரம்—கஹபிலியஹேன—கஹபிலியஹெனக் கிராமத்தை உள்ளடக்கியது. |
| கிராமசேவகர் பிரிவு இல. 313 .. | இல. 6 ம் வட்டாரம்—பொனேகலே—பொனேகலே கொறக்சதேனிய ஆகிய கிராமங்களை உள்ளடக்கியது. |
| 314 பிரிவு இல. .. .. | 7 ம் வட்டாரம்—ஒகொடபொலே—ஒகொடபொலேக் கிராமத்தை உள்ளடக்கியது. |
| கிராமசேவகர் பிரிவு இல. 315/316 .. | 8 ம் வட்டாரம்—மீவலே—மீவலேக் கிராமத்தை உள்ளடக்கியது. |
| | 9 ம் வட்டாரம்—போகொடை—கிற்றம்மஹற—போகொட கிற்றம்மஹற ஆகிய கிராமங்களை உள்ளடக்கியது. |
| கிராமசேவகர் பிரிவு இல. 318 .. | 11 ம் வட்டாரம்—பின்வரும் எல்லைகளைக் கொண்ட பிரதேசத்தை உள்ளடக்கும் திஹாரிய மேற்கு :—<br>வடக்கு : கட்டுவஸ்கொடைக் கிராமசேவகர் பிரிவில் எல்லையினால் ;<br>கிழக்கு : திஹாரிய கட்டுவஸ்கொடை கிராம சபை வீதி, திஹாரிய வரப்பலானை பொது வேலைப்பகுதி வீதி ஆகியவற்றின் மத்திய கோடுகளினால், பின்கூறப்பட்ட வீதியிலுள்ள 1/3 ஆம் இலக்க மதகு வரைக்கும்;<br>தெற்கு : அத்தனகலஓயா, திஹாரிய நெல் வயலின் வடக்கு வாய்க்கால், கழிவுநீர் வாய்க்கால் ஆகியவற்றினால் ;<br>மேற்கு . கலகெதிஹேன கிராமசேவகர் பிரிவின் கிழக்கெல்லையினால். |
| | 12 ம் வட்டாரம்—பின்வரும் எல்லைகளைக் கொண்ட பிரதேசத்தை உள்ளடக்கும் திஹாரிய கிழக்கு :—<br>வடக்கு : கட்டுவஸ்கொடைக் கிராமசேவகர் பிரிவின் கிழக்கெல்லையினால் ;<br>கிழக்கு : நித்தம்புவைக் கிராமசேவகர் பிரிவின் மேற்கெல்லையினால் ;<br>தெற்கு : திஹாரிய நெல் வயலின் வடக்கு வாய்க்காலினால் ;<br>மேற்கு : திஹாரி–கட்டுவஸ்கொடை கிராமச் சபை வீதி திஹாரிய வரப்பலானை பொது வேலைப் பகுதி வீதி ஆகியவற்றின் மத்திய கோடுகளினால் 1/3 ஆம் இலக்க மதகு வரைக்கும். |
| | 13 ம் வட்டாரம்—பின்வரும் எல்லைகளைக் கொண்ட பிரதேசத்தை உள்ளடக்கும் திஹாரிய தெற்கு :—<br>வடக்கு : திஹாரிய நெல் வயலின் வடக்கு வாய்க்காலினால் ;<br>கிழக்கு : கலத்துவாவ, கத்தோட்டை ஆகிய கிராமசேவகர் பிரிவுகளின் எல்லைகளினால் ;<br>தெற்கு : அத்தனகல ஓயாவினால் ;<br>மேற்கு : திஹாரிய நெல் வயலின் வடக்கு வாய்க்கால் கழிவுநீர் வாய்க்கால் ஆகியவற்றினால். |

11–261/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.